செ.வெ.எண். 26/மார்ச் தேதி : 10.03.2017

# தருமபுரி மாவட்டம், ஏலகிரி, நல்லம்பள்ளி, பாலஜங்கமனஅள்ளி, தொப்பூர், பாளையம்புதூர், சிவாடி, டொக்குபோதனஅள்ளி, பேடறஅள்ளி மற்றும் மாதேமங்கலம் ஆகிய ஊராட்சிகளில் ரூ. 61.15 இலட்சம் மதிப்பீட்டிலான குடிநீர் பணிகள் நடைபெற உள்ளது - மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!





தருமபுரி மாவட்டத்தில் நிலவும் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சனைக்கு உடனுக்குடன் தீர்வுகாணும் வகையில் 24 மணி நேரம் செயல்படும் 1077 கட்டுப்பாட்டு அறையில் பெறப்படும் புகார்களின் அடிப்படையில் களஆய்வு மேற்கொண்டு தேவை அடிப்படையில் புதிய குடிநீர் திட்ட பணிகள் குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் ஏலகிரி கிராம ஊராட்சியை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு ரூ. 10,50,000/- மதிப்பீட்டில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் கைப்பம்புகள், இரண்டு திறந்த வெளி கிணற்றினை ஆழப்படுத்துதல் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிட்டார்.

நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 32 கிராம ஊராட்சிகளிலும் முழுவதுமாக குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஆழ்துளை கிணறுகள் அமைத்தல், திறந்த வெளிள கிணறுகளை ஆழப்படுத்துதல், கைப்பம்புகள் அமைத்தல், பைப்லைன் அமைத்தல் மற்றும் நீட்டித்தல் குடிநீர் பற்றாக்குறையை சரிசெய்ய, பணிகள் தேர்வு செய்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாலஜங்கமனஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 75,000/-, இண்டூர் ஊராட்சியில் 4 பணிகளுக்கு ரூ. 10,00,000/-, தொப்பூர் ஊராட்சியில் 3 பணிகளுக்கு ரூ. 14,00,000/-, பாளையம்புதூர் ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2,50,000/-, சிவாடி ஊராட்சியில் 3 பணிகளுக்கு 3 பணிகளுக்கு ரூ. 9,75,000/-, டொக்குபோதனஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1,65,000/-, பேடறஅள்ளி ஊராட்சியில் இரண்டு பணிகளுக்கு ரூ. 2,00,000/-, மாதேமங்கலம் ஊராட்சியில் ஒரு பணிக்கு என மொத்தம் 23 பணிகளுக்கு ரூ. 61,15,000/- நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டுள்ளது.

மேலும் மக்களின் தேவைகேற்ப குடிநீர் பற்றாக்குறையை தீர்க்கும் பொருட்டு மாவட்ட கண்காணிப்பு மைய எண்.1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ் அப் எண். 8903891077 என்ற எண்கள் மூலம் பெறப்படும் புகார்கள் மற்றும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு ஊரக உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியிலிருந்து குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய கூடுதல் திட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.